Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

# Shiva Purana and Vedathri Maharishi's Philosophy: An Explanation

**Arulnithi A. Palaniswami,**
Professor of Manavalakkalai, Coimbatore

**Abstract:**
This exploration delves into the concept of Karma, a fundamental principle suggesting that our lives are shaped by our own actions, as elucidated by revered figures ranging from Bhagavan Veda Vyasa Maha Rishi to Bhagavan Vedathiri Maharishi. Comparing the philosophies of Vedathiri Maharishi with various other schools of thought, a profound unity emerges. Just as the source is singular, the experiences and explanations of enlightened beings resonate with a shared understanding, transcending superficial differences.

Recognizing that cultivating the mind leads to a richer life, these enlightened individuals have dedicated themselves to conveying the art of mental refinement to the masses in a way that is relevant and accessible.

Having immersed myself in the Manavalakalai (Art of Mental Well-being) techniques developed by Vedathiri Maharishi, who transformed his own life into a living experiment, I have had the opportunity to reflect on my own experiences and connect Vedathiri's teachings with the philosophies of other wise individuals. For the past fifteen years, I have been privileged to document these insights in a series of books. I am deeply grateful to my Guru for bestowing upon me this opportunity.

**Keywords:** Vedathiri Maharishi, Manavalakkalai, Karma, Shivapuranam, Shiva Purana

# சிவபுராணமும் வேதாத்திரியமும் வேதாத்திரிய விளக்கம்

## (Śivapurāṇamum Vētāttiriyamum Vētāttiriya Viḷakkam)

அருள்நிதி ஏ. பழனிசாமி , மனவளக்கலை பேராசிரியர், கோவை

**ஆய்வின் நோக்கம்**

மனித வாழ்வை அவரவர் கர்ம வினைகளே தீர்மானிக்கின்றன என்ற இயற்கை நியதியை பகவான் வேத வியாச மகா ரிஷி முதல் பகவான் வேதாத்திரி மகரிஷி வரை மகான்கள் விளக்கியுள்ளனர். பல தத்துவங்களை வேதாத்திரி மகரிஷியின் தத்துவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, ஆதிமூலத்தில் பேதமில்லாதது போல், அதையறிந்த ஞானியின் அனுபவங்களிலும், விளக்கங்களிலும் பேதமில்லை என்பதை நான் புரிந்துகொண்டேன்.

மனதை வளப்படுத்தினால் வாழ்க்கை வளமாகும் என்பதை உணர்ந்த ஞானிகள், நமது மனதை வளப்படுத்தும் கலையை காலத்திற்குத் தகுந்தாற்போல் மக்களுக்குச் சென்றடையும் வகையில் உணர்ந்தவர்கள் விளக்க முனைகின்றனர்.

வேதாத்திரி மகரிஷி தன் வாழ்க்கையையே சோதனைக்களமாக்கிக் கண்ட அனுபவங்களின் தொகுப்பான மனவளக்கலையில் தேர்ச்சி பெற்ற நான், எனது அனுபவத்தைக் கொண்டு மற்ற ஞானிகளின் தத்துவத்தோடு வேதாத்திரியத்தை இணைத்துச் சிந்தித்ததில் பெற்ற விளக்கங்களைக் கடந்த பதினைந்தாண்டுகளாக சில நூல்களாக எழுதும் வாய்ப்பளித்த குருவுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மனிதர் கடவுளை உணர்ந்தாக வேண்டும் என்பதில் எம்மதத்திலும் மாற்றுக் கருத்தில்லை என்றாலும், மக்களில் பலருக்கு ‘கடவுள் உண்டு’ என்று சொல்வதற்கும், சிலருக்கு ‘இல்லை’

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

என்று மறுப்பதற்கும் தெளிந்த அறிவு அவசியமில்லை. உண்டென்றால் ‘எப்படி?’ என விளக்குவதற்கும், இல்லை என்றால் ‘எப்படி’ என விளக்குவதற்கும் நீண்ட ஆராய்ச்சியும், தெளிந்த அறிவும் வேண்டும்; சுயமான அனுபவமும் வேண்டும். எனது 32 ஆண்டு தவ அனுபவத்தாலும், தத்துவ ஆராய்ச்சியாலும், குருவின் ஆசியாலும் விளைந்தவை தான் எனது எழுத்துகளும், உரைகளும்.

பக்தி கதைகளுக்குக் கூட உட்கருத்தை வெளிப்படுத்தும் சூத்திரத்தை மகரிஷி வேதாத்திரி தந்துள்ளார். ஒரு இயற்கை ரகசியத்தை தெரிந்தவர், தெரியாதவருக்கு பரிமாற்றம் செய்ததால்தான் நவயுக வாழ்க்கை செம்மைப்பட்டுள்ளது. ‘எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்றார் வள்ளுவர். நமது எண்ணங்களை, நமது செயல்பாடுகளை, நாம் சந்திக்கின்ற சுகதுக்கங்களை காரணமறிந்து தீயதைத் தவிர்த்து நன்மையை வளர்த்துக் கொள்ள இக்கருத்து எப்படி பயனாகும் என்ற கோணத்தில் தான் ஊடகக் கருத்துகளை நாம் அணுக வேண்டும் என்பது எனது பணிவான கருத்து. நான் என்னை திருத்திக்கொண்ட அனுபவமும், மேலும் திருத்திக் கொண்டிருக்கின்ற முயற்சியும் இது தான்.

ஆதிகாலம் தொட்டு என்றைக்கும் மக்களுக்கு தர்மத்தை, அறத்தை, ஒழுக்கத்தை போதிக்கின்ற முறைக்கு ஆன்மீகம் என்று பெயர். அதில் பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் என இரு வழிகள் உண்டு என்று பரவலாகப் பேசப்பட்டாலும், உண்மையில் ஒரே வழி, இரண்டு படிகள் என்பதே சரியான புரிதல். ஒரு பொருளை வாங்க கடைவீதிக்கு போனாலும், எந்த கடையில் கூட்டம் அதிகமோ அங்குதான் நல்ல பொருள் விற்கப்படுகிறது என்ற நம்பிக்கை பொதுவாகி விட்டது. விளம்பரத்தால் அல்லது தள்ளுபடி போன்ற வியாபார யுக்தியைப் பயன்படுத்தி நம்மை ஈர்த்து அதிக லாபம் பார்க்கிறார்கள் என்பது சிந்தனையாளர்களுக்கு மட்டுமே எட்டும்.

இதைப் போலவே, விளம்பரமின்றி தலைமுறைகளாக நமக்கு கடவுள் நம்பிக்கை, வணக்க முறைகள், சடங்கு சம்பிரதாயங்கள் போன்றவற்றின் மீது வலுவான நம்பிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. அது ஏன் ஞானிகளால், சித்தர்களால் விமர்சிக்கப்பட்டது, படுகின்றது என்றால், மக்கள் வெற்று கடவுள் நம்பிக்கையால் மட்டும் சுகமாக வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. இதை மாற்றியமைக்க நம்மால் என்ன செய்ய முடியும் என்ற அக்கறையே சித்தர்களின் சீர்திருத்தக் கருத்துகளுக்கு அடிப்படை.

நிர்வாணவாதம், துவைதம் போன்ற தத்துவங்களை உள்ளடக்கிய விசிஷ்டாத்வைதம் கடவுளைப் பற்றி விளக்க முற்பட்டபோது, அதனை நாத்திகம் என்று ஒதுக்கித் தள்ளாமல், சிலர் அலட்சியம் செய்தனர். இனிப்பு அனைவருக்கும் விருப்பமானதாக இருந்தாலும், கசப்பு யாருக்கும் பிடிக்காத ஒன்றாக இருந்தாலும், இனிப்பால்தான் வியாதிகள் பெருகுகின்றன. அதேபோல், பக்தி இனிமையாக இருந்தாலும், துன்பங்கள் விலகுவதில்லை.

வேதாத்திரியம் என்ற சமத்துவக் கொள்கையின் மூலம் சிந்திக்கும்போது, உலகில் உள்ள அனைத்து மக்களும் சகோதர சகோதரிகளே. மதம் என்ற குறுகிய வட்டத்திலிருந்து சமூகத்தை விடுவிப்பதே உண்மையான ஆன்மிகம். கிறிஸ்தவர், இஸ்லாமியர், பௌத்தர், சைவர், வைணவர் என்ற சிறு சிறு எல்லைகளைத் தாண்டி, எல்லோரும் இறைவனின் பிரதிபிம்பங்களே என்று உலக மக்களை சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்ளும்

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வகையில் மனம் விரிவடைய தெளிவான விளக்கமும், அறிவியல் பூர்வமான ஆராயச்சியும் அவசியம். அந்த ஆராய்ச்சிக்கு சரியான சமத்துவக் கொள்கைதான் வேதாத்திரியம்.

மக்களின் எண்ணம், சொல், செயல்களில் தெய்வீக நீதி பின்பற்றப்படும் அளவுக்கு அது ஞான மார்க்கம். சில சமயங்களில் இணங்கியும், சில சமயங்களில் சுணங்கியும், பிணங்கியும் செயல்படும் அளவில் அது நம்பிக்கை மார்க்கம், பக்தி மார்க்கம். நம்பிக்கையில் அவநம்பிக்கை, மூடநம்பிக்கை, துரோகம், ஏமாற்றம் எனப் பலவகையான இன்பதுன்பங்கள் வந்ததை தவிர்க்க முடியவில்லை என்று வரலாறு கூறுகிறது. சிந்திக்கின்ற அறிவை இறைவன் தந்துள்ளான். சிந்தனையைத் தூண்டிவிட மகான்களும், உண்மையான குருமார்களும் அவதரிக்கிறார்கள், போதிக்கிறார்கள். இனியும் சிந்திக்க மாட்டேன் என்று அடம் பிடித்து அடைந்த துன்பங்கள் போதுமே.

இனிமேலாவது, குறைந்தபட்சம் நம் வாழ்வில் சுகத்தை மட்டுமே அனுபவிக்க முயற்சிப்போமே. நம் சந்ததியினராவது நோயில்லாத உடலோடு, துயரமில்லாத மனதோடு, வறுமையில்லாத வசதியோடு, பகையில்லாத உறவு நட்போடு, யுத்தமில்லாத உலகத்தில் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு. ஆனால், ஆசை மட்டுமே நம் கனவை நனவாக்கிடுமா? இதுவரை வரவில்லையே. ஏனென்றால், இறைவன் இலவசமாக தரமாட்டான். மக்களே முயன்று மாற்றத்தை நிகழ்த்த வேண்டும். ஏனென்றால், இறைவன் தந்த அழகிய வாழ்வை கெடுத்தது மனித குலம்தானே. குறைகளுக்குக் காரணம் பழைய சமூகம். அவரவர் குப்பையை அவரவர் தான் அள்ள வேண்டும். 'அவரவர் சிலுவையை அவரவர்களே சுமக்கக் கடவது' என்றுதானே இயேசுபிரான் கூறியுள்ளார்.

மனித அறிவாலும், அறிவியல் கருவிகளாலும் சுட்டிக்காட்ட முடியாத கடவுளை உணர்வதற்கு அனுபவம்தான் ஒரே தீர்வு. இதுதான் தெய்வம் என்ற உண்மையை அனுபவத்தில் பெற்றுவிட்டால், தான் விரும்பியது ஏன் கிட்டவில்லை என்ற காரணம் விளங்கும். செயல் விளைவு என்ற விதி ஒவ்வொரு செயலுக்கும் தகுந்த விளைவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும். உலகெங்கும் மனித வாழ்க்கை ஒன்றேதான் என்பது புரியும்.

**வேதாத்திரியத்தின் வழியில் மெய்யுணர்வு**

இந்த விளக்கத்தைப் பெறுவதன் மூலம் கிடைக்கும் நன்மை என்ன? ஒரு இந்து, சிறந்த இந்துவாகவும், ஒரு கிறிஸ்தவர், சிறந்த கிறிஸ்தவராகவும், ஒரு இஸ்லாமியர், சிறந்த இஸ்லாமியராகவும், ஒரு பௌத்தர் உண்மையான பிட்சுவாகவும் வாழ முடியும். அவரவர் தங்கள் மதத்தில் உறுதியாக நிலைத்து, மத நூல்களில் கூறப்பட்டுள்ள அறநெறிகளைப் பின்பற்றுவதே இன்றைய தேவை. மகரிஷி அவர்கள் வழங்கிய பயிற்சிகளைப் பின்பற்றினால், உண்மையான தெய்வீக வாழ்க்கை நமக்கும் சாத்தியமாகும்.

வேதாத்திரியம் என்பது புதிய மதமோ அல்லது எந்த மதத்தைச் சார்ந்ததோ அல்ல. இது மனிதரைத் தெய்வமாக்கும் சாதனைக்கான வழி, அவ்வளவே. காலப்போக்கில் எல்லோரும் ஒரே தெய்வம் - சுத்தவெளி, பரமசிவம், பரமபிதா, அல்லாஹ் - என்பதை அனுபவத்தில் உணர்ந்துவிட்டால், யாருக்கும் முரண்பாடு வராது, வேற்றுமை வளராது. தெய்வநீதி இயற்கை விதியாகச் செயல்படுவதைப் புரிந்துகொண்டால், மற்றவரை ஏமாற்றவோ,

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வருத்தவோ மனம் ஒப்பாது.

நபிகள் நாயகம் இஸ்லாத்தில் அழகாகக் கூறினார், "இறைமாண்பு மனிதனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டால், சமுதாயத்தில் பலவீனப்பட்டவர்களின் உடைமைகளை, உரிமைகளைப் பறிக்கின்ற துணிச்சல் வராது". உண்மையான ஆன்மிகவாதி, யாருக்கும் எந்த வகையிலும் தீங்கு செய்யமாட்டார். அதுதான் மனம் அடைய வேண்டிய பக்குவம்.

நீங்கள் எந்த மதத்தைப் பின்பற்றினாலும், எந்தக் கொள்கையை ஏற்றாலும், அடிப்படையில் நாம் மனிதர்கள் என்பதை மறக்கக் கூடாது. 'மனிதன்' என்பதற்குப் பொருள், 'மனம் + இதம்' என்பதே. 'இதம்' என்பது பக்குவம். மனம் பக்குவமடைவதே பெருமைக்குரியது. அதற்கான வழி தவம்.

அறிவில் தோன்றுகின்ற எந்த கருத்தும், கண்டுபிடிப்பும் சமுதாயச் சொத்து என்பார் மகரிஷி. எந்த மகானுடைய தத்துவத்திற்கும் வேதாத்திரிய தத்துவம் முரண்படுவதில்லை என்றும், மொழி வழக்கின் காரணமாக நம்மால் புரிந்துகொள்ள முடியாத தத்துவங்களை எளிமையாக விளக்கியவர் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி என்பதை நிரூபணம் செய்ய இறையாற்றல் அளித்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கு இந்த ஆய்வுரையை சமர்ப்பிக்கிறேன்.

சாரம்சம்:

ஆதிசிவம் எனும் பரம்பொருள், தில்லையம்பலமான சுத்தவெளியாக, விண்ணாகி, காற்றாகி, நெருப்பாகி, நீராகி, மண்ணாகி, சீவன்களாய் பரிணமிக்கிறது. அரூபமான ஆதிசிவமே ஈஸ்வரனாக எழுச்சி பெற்று, விண் சக்தியாகவும், பஞ்ச பூதங்களான விநாயகனாகவும், ஆறாறான முருகனாகவும் உருவெடுக்கிறான். இந்த சிவபுராணக் கருத்தை கந்தபுராணமும் உறுதி செய்கிறது.

பக்தி மார்க்கத்தில் இறைவனை உருவத்தில் வழிபட்டுப் பழகிய நாம், அரூபத்தை ஏற்க மறுக்கிறோம். சிவபெருமான் சிருஷ்டித்த வடிவங்களில் அவனை உணர முயலாமல், மனிதன் உருவாக்கிய சிலைகளில் அவனைத் தேடுவதால் மதக் கலவரங்கள் தூண்டப்பட்டு மக்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். "இறைவெளி காட்சியாக எல்லோரும் பார்த்துக் கொண்டே மறைவாய் உள்ளாய் நீ என்று மாற்றுரை பகர்கின்றார்" என்கிறார் வேதாத்திரி மகரிஷி. கீதையில் கிருஷ்ணர், "யாரொருவன் எல்லாப் பொருட்களிலும் என்னைக் காண வல்லவனோ, எனக்குள்ளாக அனைத்தையும் காண வல்லவனோ, அவன் என்னை விட்டு நீங்குவதில்லை. நானும் அவனை விட்டு விலகுவதில்லை" என்கிறார்.

சிவப்பொருளின் பரிணாம வரலாறு மக்களின் சிற்றறிவுக்கு எட்டாததால், தெய்வீக இரகசியம் மறைந்துள்ளது. நாம் அறியவில்லை என்பதற்காக அது இல்லை என்று மறுப்பது சரியல்ல. சிதம்பரத்தில், சிவபெருமானை நடராஜர் கோலத்தில் தரிசித்த பின், திரை விலக்கி "சிதம்பர ரகசியம் பார்" என்கிறார்கள். உள்ளே இருளைத் தவிர வேறொன்றும் தெரிவதில்லை. இந்த இருளான ஆதிசிவமே ஈஸ்வரனாக எழுச்சி பெற்று, பிரபஞ்சமாக கோடானுகோடி திருவிளையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டியம் முடிகின்றபோதும், மீண்டும் அது இருளாகவே முடிகிறது என்பதே சிதம்பர

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

ரகசியம்.

இருளாக, மௌனமாக, இச்சையின்றி, தேவையின்றி, இயக்கமின்றி இருப்பதுவே ஈசன் நிலை. இதை உணர, இருள்நிலைக்கு மனமடங்கி, ஈசனோடு ஒன்றாகி இணைந்தபின்னே மெய்ப்பொருள் உணர்வு கிட்டும். இருள்நிலையை உணர்வதற்கு பொருள்வடிவம் மனம்கொண்டால் எவ்வாறு பொருந்தும்? எண்ணமின்றி மனம் ஒடுங்கி இருளாகிப் பழகுவதற்கு ஏற்ற வழி உயிர் உணர்வே. இந்த மறைபொருள் உணர்ந்த குருவின் அடி தொடருங்கள் என்கிறார் மகரிஷி.

இதை உணர்த்தவே, சிவனடியார் சந்திக்கும்போது "திருச்சிற்றம்பலம்" என்பதும், மற்றவர் "தில்லையம்பலம்" என மறுமொழி பகர்வதும் சம்பிரதாயம். அதாவது, சீவாத்மா பரமாத்மாவை அறிவதே பிறவியின் நோக்கம். திருவாசகத்தின் முக்கியப் பகுதியான சிவபுராணம் மூலம் மாணிக்கவாசகப் பெருமான் நமக்கு சொன்ன ரகசியார்த்தங்களையும், வேதாத்திரி மகரிஷி அருளிய தத்துவத்தையும் மையமாகக் கொண்டு செய்த ஆய்வில், இரண்டு மகான்களும் போதித்த நெறி ஒன்றே என்பது புலனாகிறது.

மாணிக்கவாசகப் பெருமான் அருளியது ஞானத்தை உள்ளடக்கிய பக்தி வழி விளக்கம். பகவான் வேதாத்திரி மகரிஷி அருளியது பக்தி சொல்லும் கதாபாத்திரங்கள், சம்பவங்கள் மூலம் சொல்லப்பட்ட அறிவியல் விளக்கங்களை வெளிப்படுத்துதல். அறிவியலில் மதம் இல்லையல்லவா? இப்படி உலகில் அவதரித்த அனைத்து மகான்களும் எழுதி வைத்தவை அனைத்தும் மக்கள் அனைவரும் செம்மையாக, சுகமாக வாழும் வழியை சொல்ல வந்தவையே என்பதை வேதாத்தியம் மூலமாக ஆய்ந்து விளக்க முனைந்துள்ளேன். வாழ்க வளமுடன்.

### சிவபுராணமும் வேதாத்திரியமும்

**"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க."**

சிவபுராணத்தின் இந்த வரிகள், சிவபெருமானின் திருவடிகளைப் போற்றித் துதிக்கின்றன. குறிப்பாக, கோகழியில் அரசாட்சி செய்த குருவானவரின் திருவடிகள் வாழ்க என்றும், ஆகமமாக நிலைத்து நின்று அனைத்தையும் அரவணைப்பவனின் திருவடிகள் வாழ்க என்றும் போற்றுகின்றது. ஏகன், அநேகன் ஆகிய இறைவனின் அடி வாழ்க என்று கூறி இந்தத் துதி நிறைவடைகிறது.

"ஓம் நமசிவாய" என்பது மிக முக்கியமான மந்திரமாகும். இதில் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தின் ரகசியத்தைப் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம்.

ஒரு நாள் முருகப்பெருமான், பிரம்மாவிடம் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் என்னவென்று கேட்டார். பிரம்மாவோ, தனக்கு அந்த மந்திரத்தின் பொருள் மறந்துவிட்டதாகக் கூறினார். இதனால் கோபமடைந்த முருகன், "பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாமலேயே உயிர்களைப் படைக்கிறாயா?" என்று கூறி பிரம்மாவை

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

சிறையில் அடைத்துவிட்டார்.

இந்த செய்தி சிவபெருமானின் காதுகளுக்கு எட்டியது. உடனே சிவபெருமான் முருகனிடம், "நீ பிரம்மாவை சிறையில் அடைத்துவிட்டால், படைப்புத் தொழில் நின்றுவிடுமே" என்றார். அதற்கு முருகன், "பிரணவத்தின் பொருள் தெரியாமல் மனிதர்களைப் படைத்தால், அவர்கள் ஆணவத்திற்கு அடிமையாகி அதர்மத்திற்குத் துணைபோவார்கள். எனவே, படைப்பின் அடிப்படையான பிரணவ மந்திரத்தின் பொருளை மறந்துவிட்டு அதர்மத்திற்கு வித்திட்ட பிரம்மாவை சிறையில் அடைத்தேன்" என்று பதிலளித்தார்.

"சரி, 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் என்ன?" என்று சிவபெருமான் கேட்க, "உங்களுக்கும் இதன் பொருள் தெரியாதா?" என்று முருகன் வினவினார். சிவபெருமான் சங்கடத்துடன் "தெரியாது" என்று கூற, முருகன் சிவபெருமானை ஒரு ஆசனத்தில் அமரச் செய்து பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித்தார்.

சிவம் என்பது ஆதி நிலை. உயிர்களில் உணர்ச்சி தோன்றுவதற்கு முன் இருந்த உந்து சக்தி. அது ஏகாந்தம். ஆகையால், சிவத்திற்கு பிரணவத்தின் பொருள் தெரியாதது தவறில்லை. ஆனால், பிரம்மம் என்பது சிவத்திலிருந்து உருவாகி படைப்புத் தொழிலுக்குப் பொறுப்பான பிரபஞ்சத்தின் தலைமைப் பீடமாகும். பிரம்மலோகத்திற்குத் தலைமையான பிரம்மாவிற்கு பிரபஞ்சத்தைப் பற்றியும் தெய்வ நீதியைப் பற்றியும் அறிவு இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் மனிதர்களைப் படைத்தால், ஆணவம் தலைவிரித்தாடும். தர்மம் அழிந்துவிடும்.

இதுவரை மக்கள் உலகப் போர்கள் வரை சந்தித்த துன்பங்களுக்குக் காரணம் ஆணவமே. தனி மனிதனின் ஆணவம் தன்னைச் சார்ந்தவர்களைத் துன்புறுத்தும். அரசாங்கத்தின் ஆணவம் சமுதாயத்தையே அழித்துவிடும். ஒரு ஜீவனைப் படைக்கின்ற சக்தியானது, படைக்கப்படுகின்ற ஜீவன்கள் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்ற அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்கின்றன இதிகாசங்கள்.

பிரம்மா இந்த அறிவை மறந்த நிலையில் உயிர்களைப் படைத்ததால், முருகன் பிரம்மாவை சிறையில் அடைத்து படைப்புத் தொழிலை நிறுத்தி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு முருகனுக்குத் "தகப்பன்சாமி" என்றும், "குமரகுருபரன்" என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டாயின. அதாவது, குமரனான முருகன் குரு ஸ்தானத்திற்கு உயர்ந்து பரம்பொருளுக்கே பிரணவ தத்துவத்தைப் போதித்ததால், குமரகுருபரன் ஆனார்.

**ஆத்ம சக்தியும், சகஸ்ரதளமும்**:

மூலாதாரத்தில் உறையும் ஆத்ம சக்தியான குண்டலினி சக்தியைத் தவத்தின் மூலம் மேல் நோக்கி உயர்த்தி, உச்சி நிலையான சகஸ்ரதாரத்திற்கு கொண்டுவர வேண்டும். சித்தர்கள் இதனை, "மனிதன் தெய்வத்தை அறிவதற்கான நுழைவாயில்" என்று குறிப்பிடுகிறார்கள்.

**எழுத்துக்களின் தத்துவம்**:

தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் என மூன்று வகைப்படும். வாயைத் திறந்து உச்சரிக்கப்படுபவை உயிர் எழுத்துக்கள். மெய் எழுத்துக்களைத் தனியாக உச்சரிக்க முடியாது. அவை உயிர் எழுத்துக்களுடன் இணையும்போது, உயிர்மெய் எழுத்துக்கள்

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

உருவாகின்றன. மெய் எழுத்தின் புள்ளியை நீக்கினால், அது உயிர்மெய் எழுத்தாக மாறும். உதாரணமாக, "ம்" என்ற மெய்யெழுத்தின் புள்ளி நீக்கப்பட்டால் "ம" ஆகிறது. எனவே, சித்தர்கள் இந்த "ம்" என்ற எழுத்தை இறைநிலையின் பின்னமான, தோற்றங்களின் மூலக்கூறான பரமாணு என்று குறிப்பிட்டனர்.

**மெய்யுணர்வும் மௌனமும்:**

வாயால் சொல்ல முடியாத மெய்யெழுத்தைப் போல், சொற்களால் விளக்க இயலாதது தெய்வம் என்ற கருத்தை உணர்த்துகிறது. "கண்டனவெலாம் மௌன உரு வெளி அதாகவே கருதியஞ்சலி செய்குவோம்" என்றார் தாயுமானவர். "விளக்குக்கும் விளங்காத விளக்கமில்லா சத்தியமே வெறும் கல்லாய் வீற்றிருக்கும் வினை கடந்த தத்துவமே" என்றார் கவியரசு கண்ணதாசன்.

**பிரபஞ்சமும் பிரம்மமும்:**

மெய்யும் உயிரும் இணைந்ததே இந்த பிரபஞ்சம். மற்ற உயிர்மெய் எழுத்துக்களுடன் "அ" சேர்ந்தால், அது மீண்டும் முதல் உயிர்மெய் எழுத்தாக மாறும். அதிலிருந்து உயிரை நீக்கிவிட்டால், மீண்டும் மெய்யெழுத்து கிடைக்கும். உதாரணமாக, க் + அ = க, க - அ = க்.

**தெய்வத்தின் சுழற்சி:**

தெய்வம் பல மாற்றங்களுக்கு உட்பட்டு மீண்டும் தெய்வமாக மாறுகிறது என்ற தத்துவத்தை உள்ளடக்கியதால், "ம்" என்ற எழுத்து இறைநிலையின் தன்மைக்கு உவமையாகக் கருதப்படுகிறது.

**சிவம், சக்தி, சிவசக்தி:**

மெய் - சிவம், உயிர் - சக்தி, உயிர்மெய் - சிவசக்தி, அர்த்தநாரி - பிரபஞ்சம், பிரம்மம். உயிர் என்பது ஒரு புள்ளி போல் மிக நுண்மையானது. சீவனுக்குள் உள்ள உயிரின் ரகசியத்தை உணர்த்துவது திருச்சிற்றம்பலம். இதுவே பரமாத்மாவாக எங்கும் நிறைந்துள்ளதை விளக்குவது தில்லையம்பலம்.

**மௌனமும் தியானமும்:**

மௌனமாகிய மெய்ப்பொருளை உணரும் வழி, "ஓ" என்ற மௌன வடிவ ஏழு உயிர் மையங்களில் மனதை வைத்து தியானிப்பதன் மூலம் பெறுகின்ற ஞானம். "இமையவர் நாட்டினில் நிறைகுடி ஏற்றிய எழுகரை நாட்டவர் தம் பிரானே" என்கிறது திருப்புகழ்.

**சிவபெருமானின் தியானம்:**

சிவபெருமான் எப்போதும் தனிமையில் தியானத்தில் இருப்பதன் தத்துவார்த்தம் இதுதான். பெருமானின் மூலம் ஆதிசிவம். அதை தியானத்தின் மூலம் உணர்ந்தவர்களே மெய்கண்ட நாயன்மார்கள்.

**"ஓம்" மந்திரத்தின் உச்சரிப்பு:**

மூக்கு வழியாக மூச்சை உள்ளிழுத்து, மூலாதாரம் முதல் சகஸ்ரதாரம் வரை மனதைக் கொண்டு சென்று, "ம்" என்ற அதிர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து, காற்றை மூக்கு

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வழியாக வெளியே விட வேண்டும். காற்றின் இந்த பயணத்தை பக்கவாட்டில் பார்த்தால், அது "ஓ" வடிவத்தில் அமைந்திருக்கும்.

**குண்டலினி சக்தியும் "ஓம்" மந்திரமும்:**

மூலாதாரத்திலிருந்து எழும் "ஓ" என்ற வடிவத்தை உடலின் பக்கவாட்டில் பார்த்தால், அது மண்டை, கழுத்து, முதுகுத்தண்டுக்குக் கீழே வந்து மூலாதாரத்தில் சுருண்டு நிற்கும். "ஆம்" என்ற தெய்வத்தை அறிய, மூலாதாரத்தில் இருக்கும் உயிர் சக்தியான குண்டலினியை எழுப்பி, புருவ மையத்திற்கும், உச்சிக்கும் கொண்டு வருவதற்கான பயிற்சி முறையே "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தை உச்சரிப்பது ஆகும்.

**இந்த ஞானத்தில் தொடியவரும் ரகசியம் என்ன?**

"நமசிவாய" என்பதன் உட்பொருள் என்ன? "ந" என்பது மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை நீக்குதலைக் குறிக்கிறது. "ம" என்பது இந்த மலங்களைக் குறிக்கிறது.

**இதனால் பெறுகின்ற பேறு என்ன?**

"சி" என்பது சிவத்தையும், "வா" என்பது சக்தியையும், "ய" என்பது அனைத்துமாகவும், யாவற்றையும் உள்ளடக்கிய பிரபஞ்சமாகவும் மலர்ந்துள்ள பரிணாம ரகசியத்தை அகக்காட்சியாகக் காணுதலைக் குறிக்கிறது.

நம்மில் இருக்கும் மலங்களை நீக்கிவிட்டால், ஆதிசிவமாகிய மெய்ப்பொருளே சக்தியாகவும், பஞ்சபூதங்களாகவும், "நான்" ஆகவும் மலர்ந்த வரலாற்றை அறிந்து வாழ்வாங்கு வாழலாம்.

**நாதன்தாள் வாழ்க**

"தாள்" என்றால் திருவடி, அடிச்சுவடு, கடந்து வந்த பாதை. சிவமே சக்தியாகி, பிரம்மாவாகி, விஷ்ணுவாகி, விநாயகனாகி, முருகனாகி, "நானாகவும்" மலர்ச்சி பெற்ற சரித்திரம். அனைத்துக்கும் தலைவனாகிய சிவமாகிய பரம்பொருளாகிய தெய்வத்தின் தாள் என்ற அடிச்சுவடாகிய பரிணாம வரலாற்றை உணர்ந்து சிறந்த வாழ்க்கையைப் போற்றுவோம்.

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**

'இறைவன் எல்லோரிடத்தும் இருக்கிறான். ஆனால் எல்லோரும் இறைவன் இடத்தில் இல்லை' - இராமகிருஷ்ணா. உயிர் அணுக்களாலான உடல், அணுமையம் இறைநிலை. "அணுவுக்குள் அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் இருத்தி நிறுத்தி சிந்தையுள்ளே காட்டி.." என்கிறது விநாயகர் அகவல். இப்படி எங்கும், எதிலும், எப்போதும் நீக்கமற நிறைந்துள்ள சிவம், இறைநிலைதான் இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான். அவனது தெய்வநீதிப்படி வாழ்வதே பிறவிப்பயனை அடையும் வழி.

**கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க**

"கோ" என்றால் பசு என்றும், ஆன்மா என்றும் பொருள். "கழி" என்றால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் கழித்தல். இவ்விதம் தூய்மை பெற்ற ஆத்மாவை ஆட்கொள்ளும் தயாளன், கோகழி ஆண்ட குருமணி. திரு ஆ ஆடு துறை -

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

திருவாவடுதுறை - பராசக்தி தன் பாவத்தை நீக்க பசுவாக இருந்து சிவனை வழிபட்டு விமோட்சனம் பெற்ற ஸ்தலம். மலமற்ற மனதை ஆட்கொள்ளும் கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க. உயர்ந்த குரு தத்துவமாகிய தக்ஷிணாமூர்த்தியின் தாள் பணிந்து, அவரது சொற்படி வாழ்வோம்.

**ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க**

சிவாகமம் 28, உப ஆகமம் 2,7. ஆகமநெறி தந்து அருகில் வரச்செய்கின்ற வள்ளல். தக்ஷிணா மூர்த்தியாக, குரு மூலம் தன் பரிணாம வரலாற்றை விளக்கி, தன்னை அடையக்கூடிய தவத்திற்கான தீட்சையை தந்து, ஆசீர்வதித்து, அவனது பேரானந்தத்தில் திளைக்கச் செய்யும் நம் பெருமானின் தாள் பணிவோம். காட்சிப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணம் என மூவகை உண்டு. அதாவது பக்தி, ஞானம், முக்தி. உருவத்தால் இறைவனை நம்புவது காட்சிப் பிரமாணம், உருவத்திற்கு மூலம் அரூபம் என்ற ஞானவிளக்கத்தை நம்புவது அனுமானப்பிரமாணம். இதை அனுபவத்தில் உணர்வது ஆகமப்பிரமாணம். உடல் காட்சிப் பிரமாணம், உயிர் அனுமானப்பிரமாணம், அறிவு ஆகமப்பிரமாணம்.

**ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க**

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற விரிந்து ஒன்றாய், ஏகனாய், ஏகாந்தமாய் இருந்தாலும், தனக்குள் அநேகனாய், பலவாய் பரிணமித்து, "நானாகவும்" விளங்குகின்ற இறைவனாகிய ஈசனின் திருவடி வாழ்க.

**வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க**

சிவமாகிய ஆதி பரம்பொருளை சரணடைவதால், மனம் வேகத்திலிருந்து விவேகத்திற்கு வர, என்னை அவனோடு இணைத்துக் கொள்கிறான். இவனது நீதியை வெல்லும் திறம் எதற்குமில்லை.

**சிவவாக்கியரின் திருவடி போற்றுதல்: ஒரு எளிய விளக்கம்**

**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க**: பிஞ்ஞகன் என்றால் அழகிய தலைக்கோலம் உடையவன். ஆனால் இதன் உட்பொருள் என்னவென்றால், நீண்ட தலைமுடி என்பது நம் பாரம்பர்யம் மற்றும் பரிணாம வளர்ச்சியின் அடையாளம். கங்கை நதி வித்து சக்தியின் மையமாக விளங்குகிறது. பாம்பு குண்டலினி சக்தியைக் குறிக்கிறது. பிறைச்சந்திரன் தேய்பிறை முதல் முழு நிலவாக வளர்வது போல, நம் குறையறிவை விரிவுபடுத்தினால், பேரறிவாகிய பரம்பொருளை நம்முள்ளேயே உணர முடியும். நம் பகுத்தறிவு பேரறிவாகப் பக்குவமடைய வேண்டும், முழுமை பெற வேண்டும் என்பதைக் குறிக்கிறது. சிவனின் திருவடியாகிய தெய்வநீதியின் கருணையை மதித்து, தர்மத்தின்படி வாழ்ந்தால் பிறவித் தொடர் அறுபடும் என்பதே இதன் பொருள். பெய்கழல்கள் என்றால் அடைபடாத தெய்வீக ஊற்று. இதற்கு வழி, கங்கையாகிய நமது மூலாதாரத்தில், பாம்பு சக்தியாகிய குண்டலினி சக்தியை குருவின் மூலம் எழுப்பி, உச்சியில் பிரம்மரந்திரத்தில் நிலைக்கச் செய்வது.

**புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க**: தர்மத்தை புறந்தள்ளியவர்களுக்கு

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

தூரத்தில் இருப்பவன். ஆனாலும், தெய்வநீதியை மதியாத அதர்மச் செயல்களுக்குரிய தண்டனையை வழங்குகின்ற தர்மதேவனின் அறக்கருணையான திருவடிகள் வெல்க.

**கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க**: கைகளை குவித்து வணங்கும்போது, உள்ளங்கைகளின் உள்ளே இருளாய் இருக்கும் ஆதிசிவம் என்ற பேரறிவின் பேரின்பத்தைத் துய்க்க ஆசி வழங்கும் வேந்தனின் திருவடிகள் வெல்க.

**சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க**: மனவடக்கம் பெற்று, தலையுச்சியான துரியத்தில் நிலைத்த சிரம் குவிவாரை மேன்மைப்படுத்தும் சீர்மைமிக்க தர்மசாஸ்தாவாகிய பெருமானின் திருவடி வெல்க.

**ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி**: அனைத்தும் உள்ளடங்கிய பிரபஞ்சத்தின் மூலப்பொருளாகிய ஈசனே போற்றி. பிள்ளைக்கு தந்தை ஒருவன். ஆனால் தந்தைக்கு தந்தை யார் என்று ஒவ்வொரு தலைமுறையாக கடந்து பின்னோக்கிச் சென்றால், உலக மக்கள் அனைவருக்கும் ஒரே தந்தையான இறைவனிடத்தில் முடியும். உலகுக்கே பரமபிதாவான, பரம சிவமான, அந்த ஆதிசிவம் என்ற பெருமானின் திருவடிகள் போற்றி.

**தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி**: தேசு என்றால் தேஜஸ், ஒளி, அறிவு. அறிவின் பயணமாகிய நமது பூர்வீக வரலாற்றை மதிப்பது தேசன் அடி போற்றி. சிவபெருமானின் இயக்க ஒழுங்காகிய தர்மத்தை மதிப்பது, ஒழுக்கத்தோடு வாழ்வது, சிவன் சேவடி போற்றி.

**நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி**: நேயம் என்றால் அன்பு. அன்பே சிவம். நேயத்தே நின்ற - அன்புப் பிரவாகமாகிய சிவம். நிமலன் என்றால் ஆணவம், கன்மம், மாயை என்ற அழுக்குகள் நீங்கியவன். நிமலன் - அழுக்குகள் நெருங்க முடியாதபடி தூய்மையே வடிவானவன். சுத்த வெளியாக, அன்பே சிவமாக, எனது ஆத்மாவின் அருகிலேயே பரமாத்மாவாக வீற்றிருக்கின்ற மூலமே, ஆதிசிவமே போற்றி.

**மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி**: மாயப் பிறப்பு என்பது என்ன? பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் கட்டிய அரண்மனையைப் போன்றதே மானுட வாழ்க்கை. தரையைப் போல் தெரியும், ஆனால் தடாகமாக இருக்கும். தடாகம் போல் தெரியும், ஆனால் தரையாக இருக்கும். வாசல் சுவாசப் போல் தெரியும், சுவாசம் வாயிலாக இருக்கும். மது அருந்துவது சுகமாக இருக்கும், ஆனால் வாழ்க்கை நாசமாகும். படிப்பது கடினமாகத் தெரியும், ஆனால் வாழ்வு சிறப்படையும். இப்படி மயக்கத்தில் பிறந்து, மயக்கத்தில் வாழ்ந்து, மயக்கத்தில் முடிகின்ற, உடலே நான் என்ற அறியாமைக்கு அடிமையாக போன மாயவலையிலிருந்து, பிறவித் தொடரிலிருந்து என்னை விடுதலை செய்கின்ற அரசனின் தாள் வணங்கி போற்றி.

**சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி**: சீர் ஆர் பெருந்துறை - தெய்வநீதியின்படி, கர்மவினைப்படி தொடர்கின்ற பிறவி ஆற்றின் படித்துறையாகிய ஞானமார்க்கத்தின் படிகளில் ஏறி, பிறவி ஆற்றைக் கடந்து கரையேறி, வீடுபேறாகிய சிவ தரிசனம் பெறத் துணை செய்யும், நம் பெருமானின் கருணையைப் போற்றுகிறேன்.

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி: துரிய நிலையில், என் மனம் உன் உச்சியில் நிலைக்கும்போது, கருணையுடன் என்னை வசப்படுத்தி, தெவிட்டாத பேரின்பத்தை அருளும் சிவனே, போற்றி! போற்றி!

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

சிவன் அவன் என் சிந்தையுள் நின்றதனால்: உன்னில் நான் அடங்கியபோது, என்னுள் நீ விளங்கி வழங்கிய பேரின்பத்தை உணர்ந்தேன்.

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி: என்னுள் அவன் நிறைந்திருப்பதால், அவனது தெய்வ நீதியை, தர்மத்தை வழுவாமல் பின்பற்றி ஒழுக்கத்துடன் வாழ்கிறேன்.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை: சிவநிலையின் பூர்வீகத்தையும், பரிணாம சரித்திரத்தையும் மனமுவந்து ஓதுவதில் எனது ஆன்மா பேரின்பம் காண்கிறது.

முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்: நான் பெற்ற இந்த அனுபவத்தால், எனது முந்தைய வினையாகிய சஞ்சித வினை முழுவதும் கரையும் வரை சிவபுராணத்தைப் பாடுவேன். பகவான் வேதாத்திரி மகரிஷி கூறியது போல, "என்னுள் அவனை வைத்தேன், ஏற்றி வந்தேன், போற்றி வந்தேன், என்னை அவனுள் இணைத்தான், இறைவனாகிப் பாடுகின்றேன்."

கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்தெய்தி: நெற்றிக்கண் உடைய சிவபெருமான், தன் கருணைக்கண் காட்டி என்னை ஆட்கொள்ள, என்னுள் எழுந்தருளியதால் ஞானம் பெற்றேன்.

எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி: அதனால், எனது மனம் பிரசவிக்கக்கூடிய கற்பனைகளுக்கு எட்டாத, எழில் வளரும் பெருமானின் திருவடிகளை வணங்கி, தெய்வ நீதியின்படி வாழ்கிறேன்.

விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்: விண் என்ற நுண்ணிய அணு முதலாய், மண் போன்ற கெட்டிப் பொருட்களாய், பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்திருந்தாலும், தன்னை அறியக்கூடிய திறம் மிக்க மனிதன் வரை அறிவொளியாய் விளங்கி, அனைத்தையும் சீர்மையோடு இயக்குகின்ற பேராற்றலான சிவமே!

எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்: இத்தனை மனிதர்கள் என்று எண்ணி முடிப்பதற்குள், சில குழந்தைகள் பிறந்து விடுவதால், எண்ணிறந்த பிறப்புகளும், தோற்றங்களும், எல்லையில்லாத பரவெளியுமாகிய நீயே, இவை அனைத்தையும் சீர் என்ற இயக்க விதியோடு தர்ம பரிபாலனம் செய்கின்ற பெருமையை எப்படி விளக்குவது?

பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்: பாவ புண்ணிய கர்ம வினைகளோடு பிறந்த பொல்லா வினையேன் நான், வாயிருந்தும் சொல்வதற்கு வார்த்தையின்றி தவிக்கிறேன். மகளுக்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய தேக சுகத்தைச் சொல் என்றால், சொல்லுமாறு எங்ஙனே? அந்த இன்பத்தைச் சொல்வதற்கே வார்த்தை இல்லாதபோது, உன் பேரின்பத்தை எப்படி விளக்குவேன், இறைவா?

புல்லாகி/ பூடாய்/ புழுவாய்/ மரமாகி: காற்று வந்தால் மரமசையும் காற்றை கண்டதுண்டா? கடலின் நீரை மேகம் வாங்கும் கண்கள் பார்த்தது உண்டா? வீதியெங்கும் புல் முளைக்கும் விதையைக் கண்டதுண்டா? அதாவது, புல் விதையின்றி முளைப்பது, பூண்டு வாழை அடிவாழை போல் தழைப்பது, புழு, மரம் போன்றவை ஒன்றிலிருந்து ஒன்றாய், தாயிலிருந்து சேயாய் பிறப்பது.

பல் விருகமாகிப் பறவையாய் பாம்பாகி: பலவகை மிருகமாக, பறவையாக, பாம்பாக,

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

கல்லாக, மனிதராக, பேயாக, கணங்களாக, அசுரராக, முனிவராக, தேவராக பரிணமித்த நீண்ட வரலாறு படைத்த பரம்பொருளே, அனைத்தும் உனதன்றி வேறேது? காதரே என்றாலும், அர்த்தம் நீ தானே. அல்லாஹ் என்றாலும், நீ அல்லால் வேறேது?

சங்கமம்: தாவரங்களும், உயிரினங்களும் சேர்ந்த இந்த உலகத்தில், நீ மாற்றமே இல்லாத ஒரு மாறாத தத்துவம். உணர்வற்ற பொருட்களாகவும், உணர்வுள்ள உயிர்களாகவும் இந்த பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்து இருக்கிறாய்.

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்: என் தலைவனே, எல்லாப் பிறப்புகளையும் எடுத்து நான் களைத்துவிட்டேன். அணுசக்தி முதல் என் தந்தை வரை, பிறந்து இறந்து, பிறந்து இறந்து பல பிறவிகளை எடுத்து பிறருக்கே உழைத்து ஏழையானேன். அறிவுச் செல்வத்தையும், உன்னுடைய பரமாத்ம தரிசனத்தையும் பெறவில்லையே!

மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்: அழியாத, என்றைக்கும் நிலைத்திருக்கும் மெய்ப்பொருளே, உன்னுடைய பரிணாம வரலாற்றை அறிந்து, இன்று உன்னுடைய தரிசனம் பெற்றதால், நான் வீடுபேறு அடைந்தேன்.

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற/ மெய்யா/ விமலா/ விடைப்பாகா: நான் உய்வு பெற, என் உள்ளத்தில் ஓம் என்னும் பிரணவப் பொருளாய் நிறைந்திருக்கும் மெய்யனே! அழியும் என் தேகத்திற்குள் அழியாத ஆத்மாவாய் விளங்கும் பரம்பொருளே! ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் என்னை நெருங்க விடாது விலக்கியவனே! பசு என்னும் என் ஜீவாத்மாவையே வாகனமாகக் கொண்டு என்னுள்ளே உறைபவனே!

வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே: வேத நூல்கள், 'எப்படிச் சொல்வேன், என் ஐயா' என உன் பெருமைகளை வியந்து பேசுகின்றன. உன்னை விட உயர்ந்த பொருள் இல்லை, உன்னை விட ஆழமான பொருள் இல்லை, உன்னை விட அகன்ற பொருள் இல்லை. எல்லை காண வியலாத பிரபஞ்சத்திற்கே எல்லையாய் அமைந்தவனே, நுண்ணிய தியான அறிவுக்கு மட்டுமே எட்டும் நுண்ணியனே! உன்னை மறவாது இருப்பதே பிறவித் தளையை நீக்கும் வழி.

வெய்யாய்/ தணியாய்/ இயமான னாம் விமலா: வெப்பமாகவும், குளிர்ச்சியாகவும், கோபமாகவும், கருணையாகவும் மாறுகின்ற எதுவும் உன்னை களங்கப்படுத்த முடியாது, விமலா! இவை அனைத்தும் உனது மாயத் திருநடனங்களே என்பதை அறிந்தபின், பொய்யானவை எல்லாம் அகல, நித்திய வஸ்துவாகிய நீ என்னிடம் வந்தருளினாய்.

மெய்ஞானம் ஆகி/ மிளிர்கின்ற மெய்ச்சுடரே: ஒரு நாளில் கெட்டுப்போகின்ற பாலுக்குள், பல நாள் வரை கெடாத நெய் மறைந்து இருப்பதைப்போல், எனது அழிகின்ற தேகத்திற்குள் அழியாத மெய்ப்பொருளாய் உள்ள நீயே, யாதுமாய், யாவையுமாய் நிறைந்த உலகையும் உன்னுள் அடக்கியுள்ள சிறப்பை அறிந்த தெளிவால், மெய்ஞானத்தால் என்னுள் சுடர் விடுகின்ற அறிவாய் விளங்கும் மெய்ப்பொருளே!

எஞ்ஞானம் இல்லாதேன்/ இன்பப் பெருமானே/ அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே: அஞ்ஞானம், ஞானம், விஞ்ஞானம், மெய்ஞானம் என்ற அறிவின் வளர்நிலைக்கு அப்பால் நிலைத்த முழுமைப் பொருளே, இன்பப் பெருமானே! "எனக்கு

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

ஒன்றுமே தெரியாது என்பதை நான் உணர்ந்த போது, மக்கள் என்னை மகான் என்றார்கள்" - ரமண மகரிஷி. அதாவது, அறிந்தது அனைத்தும் மறையும்போது, அறியாதது விளங்கும் என்கிறார் ரமணா. அஞ்ஞானம் அகல்கின்றபோது, இறைஞானம் வந்தடையும்.

ஆக்கம்/ அளவு/ இறுதி இல்லாய்/ அனைத்து உலகும்: இறைவா, பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற எல்லைகளுக்கு, நியதிகளுக்கு அப்பாற்பட்டவன் நீ!

ஆக்குவாய்/ காப்பாய்/ அழிப்பாய்/ அருள் தருவாய்/ போக்குவாய்: பிரம்மமாய் நின்று ஆக்குவாய், விஷ்ணுவாய் நின்று காப்பாய், ருத்ர சிவமாய் நின்று அழிப்பாய். மனிதனாய் பிறந்த நான் உனது தெய்வ நீதியை பின்பற்றி நடந்தால், எனக்கு அருள் தருவாய். ஆணவம், கன்மம், மாயை என்ற எனது மும்மலங்களை போக்கி ஆத்ம தூய்மை தந்து பிரம்மஞானத்தில் திளைக்கச் செய்வாய்.

**பேரறிவின் பேரருள்: ஒரு ஞானப்பயணம்**

"எனைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்" - ஞானம் பெற்ற என்னை, இறைவா, உனது அடியார் கூட்டத்தில் சேர்த்துக்கொள். சத்திய நெறி தவறாமல், ஒழுக்கத்துடன் வாழ என்னை நீ பாதுகாத்திடு. உனது திருவடியை நான் சரணடைகிறேன்.

மலரின் மணம் எழும் ரகசியம் என்ன? மலரின் உயிர் ஓட்டத்தில் கலந்துள்ள சீவகாந்தத்தின் நுண்ணிய மாற்றமே அந்த மனோகர மணம். அந்தச் சிறப்பின் காரணகர்த்தாவே நீதான், உன் திருவருளே. "நாற்றத்தின் நோயாய்" - அந்த நறுமணத்தின் ஊற்றாக நீ இருக்கிறாய்.

"சேயாய், நணியானே" - அண்மை, சேய்மை என்ற தூர கணக்கிற்கு அப்பாற்பட்டவனே! நீ அருகில் இருக்கிறாய், அதே சமயம் தூரத்திலும் இருக்கிறாய். நீ எல்லையற்றவன்.

"மாற்றம், மனம் கழிய நின்ற மறையோனே" - மாற்றமே நிலையானது என்ற விதிக்கு உட்பட்ட இந்த பிரபஞ்சத்திற்கு அப்பால், மாற்றமில்லாத சுத்தவெளியாக நிலைத்திருப்பவனே! "மாற்றம் கழிய" - மனம் என்ற சஞ்சித, பிராரப்த, ஆகாமிய வினைகள் நெருங்க முடியாத தூய பரம்பொருளே, மனமற்ற தூய அறிவே நீ.

"மறையோனே" - கண்களால் காணமுடியாத மறைபொருளாகவும், வார்த்தைகளால் விளக்க முடியாத தத்துவமாகவும், சடங்கு சம்பிரதாயங்களால் உணரமுடியாத உண்மையாகவும், வேஷ பக்தியால் எட்ட முடியாத பேரறிவாகவும் நீ இருக்கிறாய். நீ நீக்கமற அனைவருள்ளும் இருந்துகொண்டே அறியமுடியாத புதிராக, பேரருளாக, பேரின்பமாக எங்கும் வியாபித்திருப்பவனே. உள்நோக்கி பார்த்தால் நீ என்னுள்ளும் இருக்கிறாய்.

**கறந்த பால், கரும்பொடு நெய் கலந்தாற்போல்**

கறந்த பால், கரும்புச்சாறு, நெய் கலந்த சுவைமிக்க பானகம் போன்ற தெய்வீக இன்பம் நீ. இந்த உவமையில் மூன்று வகையான பக்தர்களின் நிலை உணர்த்தப்படுகிறது.

1. கறந்த பால் - பசு கன்று ஈன்றவுடன் சுரக்கும் பால் போல, மனிதன் இல்லறம் முடித்து, வானப்பிரஸ்தம் என்ற துறவறத்தை மேற்கொள்வது போன்றது.

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

பிரம்மச்சர்யம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என காலத்தால், வயதுக்குத் தகுந்தாற்போல் பக்குவமாகும் பக்தன் ஒரு வகை.

2. கரும்பு - இரும்பு உருளைகளுக்கு நடுவே நசுக்கப்படும்போது வெளிப்படும் சாறு போல, துன்பத்தில் துடித்து பக்குவமான பின் வரும் ஞானம் போன்றது. அதாவது, "எனது" என்ற பற்றுகள் அனைத்தும் அற்று, "நான்" என்ற அகங்காரமும் அழிந்த பின் பெறுகின்ற ஞானம். கெட்ட பின்பு ஞானம் வருவது போன்றது இது.

3. நெய் - பாலானது தயிர், வெண்ணெய் எனப் பயணித்து நெய்யாவது போல, பாலாக இருக்கும் என் மனதில் குருவின் தீட்சை என்னும் உறை ஊற்றப்பெற்று, அமைதியாக தவத்தில் தனித்திருந்து தயிராகி, இன்பதுன்ப அனுபவங்களால் கடைந்து எடுக்கப்பட்ட வெண்ணெயாகி, இறை அருளால் அன்பே சிவமென்று உணர்ந்து நெய்யாவது ஒரு வகை. இதுவே பக்குவமான பக்தியின் உச்சம்.

"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" - எங்கள் பெருமானே, நீ எங்கள் பிறவிப்பிணியை அறுப்பவன். "நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்" - ஐந்து விதமான நிறங்களை உடையவனே, "விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய்" - தேவர்கள் துதிக்கின்றபோதும் நீ எல்லோருக்கும் புலப்படாமல் மறைந்திருக்கின்றாய். "எம்பெருமான் வல்வினையேன் தன்னை" - எம்பெருமானே, கொடிய வினைகளை உடைய என்னை உன் திருவடியில் சேர்த்துக் கொள்.

சரீரமென்பது பாலாகும் - அதில் மனமென்பது தயிராகும் வெண்ணெய்தானோ உந்தன் கருணையாகும் - இந்த நெய்யபிஷேகம் எங்கள் அன்பாகும். - கண்ணதாசன்

இப்படி கறந்த பால், கரும்புச் சாறு, நெய் என்ற மூன்றுவிதமான பக்தர்களின் உள்ளும் மறைபொருளாகக் கலந்திருக்கும் பரமசிவமே.

ஞானம்மிக்க அடியாரின் சிந்தனையில் தேன் ஊறி நிற்பவனே - பக்தன் என்றால் அடியார், ஞானம் கொண்டவரே சிறந்த அடியார். மலருக்குள் தேன் கசிந்து ஊறுவது போல, சிறந்த அடியாரின் சிந்தனையில் இன்பத் தேனாக ஊறி நிற்கும் பெருமானே.

மீண்டும் பிறவாத நிலையளிக்கும் எங்கள் பெருமான் - எண்ணற்ற ஆண்டுகளாக, கடந்து வந்த பரிணாம வளர்ச்சியில் சிவத்துடன் ஆணவம், கன்மம், மாயை கலந்ததால் மனிதன் ஆனான். இந்த மனிதனிடமிருந்து மும்மலங்களும் நீங்கிவிட்டால், மனிதனே வாழும் தெய்வமாகிறான். வள்ளுவரின் கூற்றுப்படி, "யான் எனது" என்னும் செருக்கை அறுப்பவன் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுந்து, பெருமானின் கருணையால் மீண்டும் பிறவா முக்தியை அடைகிறான்.

ஐந்து நிறங்களை உடையவனே - வேறுபட்ட பூதங்கள் ஐந்தும் இணைந்த பிரபஞ்சமாக, ஐம்பூதங்களில் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மனம் என்ற ஐந்து வகை தன்மாத்திரைகளாக, ஐந்தறிவு ஜீவன்களாக, ஐந்து செயல் புலன்களாக, ஐந்து உணர்வு புலன்களாக வெளிப்பட்ட அனைத்தும் உனது உடைமைகளே, இறைவா.

தேவர்கள் போற்ற மறைந்திருந்தாய், எம்பெருமான் - மிக நுண்ணிய விண்ணுக்குள்ளும் நீ கருவாக மறைந்திருக்கும் ரகசியத்தை அறிந்த ஞானிகள், உனது பேரானந்த திளைப்பில் வியந்து போற்றுகின்ற பெருமைக்குரிய எம்பெருமானே.

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வல்வினையேன் தன்னை...

மறைந்திடும் மாயையை மூடிய இருளை, அறம் பாவம் என்னும் அரிய கயிறால் கட்டி, புறத்தோலை போர்த்தி எங்கும் புழு அழுக்கு மூடி, மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை, மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய.

விடுதலை பெற முடியாதபடி வலிமைமிக்க வினையாகிய பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் என்ற லௌகீக அனுபவங்களில் ஆழ்ந்து கிடந்து, பெற்ற சஞ்சித, பிராரப்த கர்மபந்தங்களில் சிறைப்பட்ட என்னுள், மறைந்துள்ள உன்னை அறிய முடியாதபடி, உடல் சார்ந்த வாழ்க்கையே நிலையானது என்று மயங்கி, அறியாமையில் மூழ்கி இருந்தேன். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன் இன்பங்களே நிலையானது என்று நம்பி, அவற்றை பெறுவதற்காக நான் கற்றுக்கொண்ட வித்தைகளும், கையாண்ட நுட்பங்களும், வளர்த்துக்கொண்ட அறிவும், செய்த செயல்களும் ஆத்ம லாபத்திற்குப் பயனாகவில்லை என்பதை அறியமுடியாதபடி அழுத்தமான கர்மவினைக்கும், புலனின்பங்களுக்கும் அடிமையான வல்வினையேன் நான்.

**அறம் பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி:** பாவ புண்ணியக் கணக்குகளால் உருவான ஆன்மாவாகிய என்னை, இந்த உடலோடு பிணைத்து வைத்திருக்கிறாய்.

**புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி/ மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை:** வாய், மூக்கு, கண்கள், காதுகள், சிறுநீர் மற்றும் மலத்துவாரங்கள் என ஒன்பது வாசல்களைக் கொண்ட இந்த உடலில், பல் இடுக்குகளில் கிருமிகள், மூக்கில் சளி, கண்ணில் பீளை, காதில் குரும்பை, சிறுநீரில் கிருமிகள், மலத்தில் புழுக்கள் என எங்கும் அழுக்கு நிறைந்திருக்கிறது. இதை மறைக்க அழகிய தோலால் போர்த்தியிருந்தாலும், உள்ளுக்குள் விலங்குகளின் எண்ணங்களும் பதிவுகளும் என்னை மூடி வைத்திருக்கின்றன.

**மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய:** இன்ப மயக்கத்தில் மூழ்கிய என் ஐம்புலன்களும், அனுபவித்தாலும் திருப்தி அடையாமல், எத்தனை கிண்ணங்களில் மது ஊற்றினாலும் சுவை ஒன்றுதான் என்ற உண்மையை உணராமல், புலன் சுகங்களில் என்னை ஆழ்த்தி, உனது அருளைப் பெற முடியாதபடி வஞ்சிக்கின்றன. இறைவா!

**விலங்கு மனத்தால்/ விமலா உனக்கு:** காம எண்ணங்களில் சிக்கித் தவிக்காமல், களங்கமில்லாத தூய்மையே உருவான விமலா, உனக்கு என் விலங்கு மனத்தால் அன்பு செலுத்த முடியாமல் தவிக்கிறேன். பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக் கொள்ள, மீதி மனதில் மிருகம் இருந்து ஆட்டி வைப்பது போல் உள்ளது என் நிலை.

**கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும் நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி நிலம் தன்மேல் வந்தருளி:** இப்படிப்பட்ட நலமில்லாத சிறியவனான எனக்கு, கருணை காட்டி, இந்த பூமிக்கு குருவாக, தட்சிணாமூர்த்தியாக வந்தருளினாய். தன்னை அறிந்தவர்களுக்கு தானாகவே நின்றவனே. அண்டத்தில் உருவெடுத்து, அறிவு பெற்று, அந்த அறிவு ஒன்று முதல் ஆறாக விரிந்து, எண்ணற்ற அனுபவங்களைப் பெற்றேன். அப்போது, என் மெய்யுணர்வை எழுப்பி, ஞானக் குண்டலினியைத் தூண்டி, என்னை உணரச் செய்த குருவே, அன்பே, பரம்பொருளே!

**நீள்கழல்கள் காட்டி நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு:** உனது நீண்ட பரிணாம

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வரலாற்றை விளக்கி, மெய்ப்பொருளாக, பொய்த் தோற்றங்களாக, மாயை நிறைந்த மனித வாழ்வாக உள்ள அனைத்திலும் நீயே நிறைந்திருக்கிறாய் என்பதை உணர்த்தினாய். கருணையுடன் உன் திருவடிகளைப் பின்பற்றி உன்னை அடையும் வழியைக் காட்டினாய். நாயைப்போல் இலக்கில்லாமல் உண்டு, உறங்கி, திரிந்து வாழ்ந்த என்னை ஆட்கொண்டாய்.

**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**: தாயை விட சிறந்த கருணை உள்ளம் கொண்டவனே, அறக்கருணை, மறக்கருணை என இரண்டு விதமான கருணையும் காட்டுபவனே. என் பாவங்களை போக்கி என்னை உன்னுடன் சேர்க்க வந்தவனே.

**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே தேசனே தேனார் அமுதே சிவபுரனே/ பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்**: மாசு இல்லாத ஒளிப்பிழம்பே, மலர்ந்த மலரின் சுடரே, பிரகாசமானவனே, தேன் போன்ற அமுதமானவனே, சிவபுரனே, பாசமாகிய பிணைப்பை அறுத்து அருள்புரியும் ஆரியனே, அன்பான அருளைப் பொழிந்து என் நெஞ்சில் உள்ள வஞ்சனையை கெடுப்பவனே.

சச்சிதானந்தம்: பேரறிவின் பேரொளி

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே" - தூய்மையான அறிவெனும் ஆற்றல் பிரபஞ்சமாக விரிந்து மலர்ந்த பேரொளியே. வள்ளுவனின் வாக்கின்படி, "மலமிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" - மலர் மீது வீற்றிருக்கும் இறைவனின் திருவடியை அடைந்தோர் இவ்வுலகில் நீடுழி வாழ்வர் என்ற அறிவுச்சுடரே.

"மலர்" என்பது வளர்ச்சியின் முழுமை. ஒரு விதை மண்ணில் விழுந்து முளைத்து, செடியாகி, மரமாகி, பின்னர் பூத்து, மகரந்தச் சேர்க்கை மூலம் காய் ஆகி, பழமாகி, மீண்டும் விதையாகி அடுத்த தலைமுறைக்கு ஆதாரமாகிறது. இவ்வாறு ஆதியாக இருந்தது, ஆற்றலாய் எழுந்தது, அண்டங்களாய் விரிந்தது, உயிர்களாய் மலர்ந்தது தான் சத்து, சித்து, ஆனந்தம் எனும் சச்சிதானந்தம் என்னும் பரம்பொருள். அதுவே மலர்மிசை ஏகிய மாண்புமிக்க மறைபொருள்.

தேஜஸ்: ஒளியின் ஊற்று

"தேசனே - தேஜஸ் என்ற ஒளியாகிய அறிவே! தேனார் அமுதே சிவபுரனே" - தேனைப் போல் இனிக்கும் அமுதமாக, மலரில் தேன் கசிவது போல் இன்ப ஊற்றாய் பெருகும் பராபரமே! ஆதி சிவமே! சுத்த வெளியே!

பாசத்தை அறுக்கும் ஆரியன்: பற்றற்ற பேரருள்

"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" - பாசம் என்னும் உயிர் தொடர்பையும், பற்று என்னும் பொருள் தொடர்பையும் அறுத்து, என்னை ஆட்கொண்ட சிவமே! அறிவொளியே!

அருள் ஒளி: களங்கம் நீக்கும் கருணை

"நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட" - அன்போடு திருவருள் காட்டி, பிறவித் தொடரான எனது ஆத்மாவின் களங்கங்கள் போக, சிவகளமாகிய பெருங்களத்தமாக்கிய பெருமானே.

பேராறே: கருணையின் பெருவெளி

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

"பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே" - என் உள்ளத்தை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் கருணை மிக்க, அடைபடாத இன்ப ஊற்றே, இறைவா!

அமுதே: மரணமில்லா வாழ்வு

"ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே" - புலன் கடந்த மெய்யுணர்வில், உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதே! மரணமில்லா நிலைத்த வாழ்வுக்கு வித்தான அமுதமே! அழியாத, பேரானந்த ஊற்றே! எல்லையில்லாப் பெருவெளியே!

ஒளியானே: நீதி மன்றம்

"ஓராதார் உள்ளத்து ஒழிக்கும் ஒளியானே" - உன்னை மதிக்காதவர் உள்ளத்திலும் மறைந்திருக்கும் தெய்வீக நீதி மன்றமே! நின் கருணை வெள்ளம் எங்கும் நீக்கமற நிறைந்ததன்றோ!

உயிரானவனே: சிவமயம்

"நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே" - பனிக்கட்டி உருகி நீராவது போல், பக்திப் பெருக்கில் எந்தன் ஊன் உருக, அந்தப் பரவசத்தில் உள்ளே உயிர் உருக, சக்தியெல்லாம் திரண்டு, சிவம் பெருக, சித்தமெல்லாம் எனக்கு சிவமயமே. தன்னை அறிந்தவர்க்குத் தானாகி நின்றவனே! என்னை அறிந்து கொண்டேன் அண்ணலே!

நித்தியமும் நிலையானதும்: ஆத்மாவின் ஆனந்தப் பயணம்

**இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே**

மனமெனும் சிறு கூண்டில் இன்ப துன்பம் அனுபவிப்பவனே, மனமற்ற பேரறிவில் அவையற்றவனே, நீ என்னுள்ளே இருக்கிறாய். திரைப்படச் சுருளில் பதிவான சலனமற்ற காட்சிகள், கருவியின் துணையால் திரையில் ஆடுவதைப்போல, ஆத்மாவின் பாவ புண்ணியங்கள் உடல் மூலம் இன்ப துன்பமாக உணரப்படுகின்றன. திரைப்படத்தை ரசிக்கும் இயக்குனரைப் போல், உடலின் இன்ப துன்பங்களை பாராமல் அமைதியாய் இருக்கும் ஆத்மாவே நீ. அந்த ஆத்மாவுக்கு மூலமான பரமாத்மாவும் நீயே.

**அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்**

அன்புள்ள உள்ளத்தில் அன்பாக இருப்பவனே, அன்பே சிவம் என உணர்த்துபவனே, நீயே எல்லாம், இல்லாததும் நீயே. உருவாய், அருவாய், உள்ளாய், இல்லாய், தோற்றமாகவும், தோற்றங்களுக்கு முன்பும் பின்பும் நீக்கமற நிறைந்திருப்பவனே.

**சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே**

ஒளியாகச் சுடர்பவனே, கும்மிருட்டாய் மறைபவனே, எல்லா உண்மைக்கும் சாட்சியாக இருந்தும், காட்சிக்கு புலப்படாத பெருமையனே.

**ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே**

ஆதியாக, அந்தமாக, நடுவாகவும், அவை அல்லாத ஒன்றாகவும் திகழ்பவனே. படைக்கும் பிரம்மா, காக்கும் விஷ்ணு, அழிக்கும் ருத்ரசிவம் நீயே.

**ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே**

என் மனதை விரித்து உன்னுடன் இணைத்துக்கொண்டாய். கர்ம வினைகள் கழிந்ததை உணர்கிறேன். பேரின்ப ஊற்றான உன்னில் மிதக்கிறேன். இந்த நிலை மாறாமல் காத்தருள்வாய் எந்தையே.

**கூர்த்த மெய்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்**

மனம் நுணுகி, இயக்கமற்று நின்றபோது பெற்ற ஞானம் இது. 'பழுத்த நிலை வரும் வரையில் நீ வேறு, நான் வேறு என்றிருந்தேன். பதம் அடைந்தேன், உன்னோடு கலந்து விட்டேன், பரமானந்தம்'

**நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே**

முகத்தில் கண் கொண்டு பார்ப்பது மூடத்தனம். அகத்தில் கண் கொண்டு பார்த்தலே ஆனந்தம். கண்ணால் காண்பது எல்லாம் தலைவா உனது லீலை. கண்கள் வழியாக அறிவாகிய சிவமாக நீயே காண்கிறாய். நினைப்பது நான் அல்ல, நெஞ்சமாகிய சிவமே நினைக்கிறது. என் செயல் என்பது எல்லாம் இறைவா, என்னுள் இருக்கும் உன் செயலே என உணர்த்தும் அறிவே.

**நுணுக்கரிய நுண்ணுணர்வே**

காலில் முள் தைக்கும் நொடியில் உணர்ந்து, முள் தைக்காமல் காக்கும் நுண்ணுணர்வே. ஒரு நொடியை விஞ்ஞானம் லட்சம் கோடி பைக்கோ நொடிகளாக பிரித்து விட்டது. அதைவிட நுண்ணியது உன் உணர்வு.

**போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே**

சுத்த வெளியாகிய ஆதிசிவம் எங்கிருந்தும் வருவதில்லை, எங்கும் போவதில்லை, எதனோடும் கலப்பதில்லை. இன்ப ஊற்றாய் பெருகும் பரம்பொருள் நீயே.

**காக்கும் என் காவலனே**

கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கருவிலிருக்கும் உயிருக்கும் உணவளித்து காக்கும் கருணையாளனே! நீயே என் பாதுகாவலன்.

**காண்பரிய பேரொளியே**

சூரியனின் ஒளியையே நேருக்கு நேர் பார்க்க முடியாத மனித கண்களால், உன்னுடைய அந்தப் பேரொளியை எப்படி தரிசிக்க முடியும்? சிற்றறிவின் இன்பத்தையே தாங்க முடியாத என் புலன்கள், பேரறிவின் பேரின்பத்தை எப்படி தாங்கும்?

**ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற**

வற்றாத ஜீவ நதியின் ஊற்றே! இன்ப வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடி, என் தந்தையாகவே நீ வீற்றிருக்கிறாய். ஆழமாகவும், அகலமாகவும், ஓங்கி உயர்ந்தும், பெரும் வெறுமையாகவும் விளங்கும் எல்லையற்ற மெய்யே நீ!

**தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்**

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

நான் என்ற தோற்றமாகவும், வடிவமாகவும், வண்ணமாகவும் இருப்பவனே! எனக்குள் மனதைக் கடந்த நுண்ணிய உணர்வாகவும் இருப்பவனே! இந்த பிரபஞ்சத்தில் இதைவிட நுண்மைக்கும் நுண்மையாய் இருப்பவனே நீ!

**மாற்றமாம் வையகத்தின் வேறே வந்து அறிவாம்**

மாற்றம் ஒன்றே நிலையானது என்ற தத்துவத்தின் அடிப்படையில், இந்த உலகத்தில் எண்ணற்ற வேறுபட்ட வடிவங்களாய், தோற்றங்களாய், ஜீவன்களாய் இயங்குபவனே!

**தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்**

'என்னை அவனே தான் அறிவான்'. அறிவு, அறியும் திறன், அறிந்த தெளிவு, அறிந்தவன், அறியப்பட்டவன் என அனைத்தும் நீயே, ஆதி சிவமே.

**ஊற்றான உண்ணார் அமுதே உடையானே**

"நான்" என்பது யார்? எனது சிந்தனை எங்கிருந்து வருகிறது? மூலப்பொருள் எது? என்ற கேள்விகளாகவும், பதிலாகவும் வருகின்ற ஓஜஸ் சத்து என்கின்ற தெய்வீக அமுதம் நீ. வாயால் உண்ண முடியாத ஜீவகாந்தப் பேரமுதின் பிறப்பிடமான ஆதி சிவமே.

**வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப**

நீயே பிரிந்து, வேறுபட்டு, மாறுபட்ட இந்த சதை உடம்பினுள்ளும் உறைகிறாய்.

**ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று**

"ஓ" என்ற மௌன வடிவாய் என்னுள் சப்த மையங்களாய் நீயே இருப்பதை அறியாமல், கொந்தளிக்கும் என் மனதை ஆற்றத் தெரியாமல் தவிக்கிறேனே! இறைவா! சிவபெருமானே!

**போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்**

உன்னைப் போற்றி, புகழ்ந்து, வாழ்ந்து, மாய வலையில் சிக்காமல், மெய்யைக் கண்டார்கள் ஞானிகள்.

**மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே**

வினைப்பதிவாம் சுமையை விடுத்து தூய்மை பெறவே, நினைவாக உடலெடுத்தேன். நிலம் மீது விழுந்த பின்னே, என்னை மறந்தேன், எந்தன் வினை மறந்தேன், உன்னை மறந்தேன், இறைவா. ஆனால் நீ என்னுள் நிறைந்து என்னை மீட்டு, இன்ப ஊற்றாய் நிறைந்தாய், இறைவா.

சரணாகதி: கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்கும் வல்லான்

**மாயப் புலன்களின் பிடியிலிருந்து விடுதலை**

"கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே - கள்ளப்புலன் ஐந்தும் காளாமணி விளக்கே" என்ற வரிகள், மயக்கத்தில் ஆழ்த்தும் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து மாயப் புலன்களால் ஆன உடலின் பிணைப்பை அறுக்க வல்ல பரம்பொருளைக் குறிக்கின்றன. புலன்கள் அறிவை வெல்வது இயற்கை; ஆனால், அறிவால் புலன்களை வெல்வதே

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

உயர்ந்த நிலை. அவ்வாறு வெல்லும் அறிவாக விளங்கும் பராபரமே சரணாகதி.

**இருளில் ஆடும் நாதன்**

"நல் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே" - தூய்மையான வெளியில், அணுசக்தி முதல் மனிதன் வரை, மண்ணிலிருந்து முளைக்கும் புல்லைப்போல் எண்ணற்ற தோற்றங்களில், ஜீவன்களாக வெளிப்பட்ட ஆதிசிவனே! காற்று வந்தால் மரம் அசையும்; ஆனால் காற்றைக் கண்டதில்லை. வீதியெங்கும் புல் முளைக்கும்; விதையைக் கண்டதில்லை. கடலின் நீரை மேகம் வாங்கும்; கண்களால் பார்த்ததில்லை. அதுபோல, என் உடலுக்குள்ளே உள்ளமாக நட்டம் பயின்று ஆடும் நாதனே, உன்னைக் கண்டதில்லை.

**தில்லையின் திருவிளையாடல்**

"தில்லை உள் கூத்தனே" - தில்லை எனும் இப்பிரபஞ்சத்தில் நீ ஆடும் திருவிளையாடல்களை எண்ணிச் சொல்லும் திறன் படைத்தவர் யார்? நீ அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே!

**தென்பாண்டி நாட்டானின் ஞானம்**

"தென்பாண்டி நாட்டானே" - இப்படி பிரபஞ்சத்தில் எண்ணற்ற திருவிளையாடல்களை நிகழ்த்துகின்ற நடராஜனே, எனது தலையுச்சியில் தென்புலமாக, பிரம்மரந்திரமாக, உன்னை அறியக்கூடிய வாயிலாக அமைந்த தென்பாண்டியனே, தென்னவனே! மன்னவன், தென்னவன், வானவன், தானவன் என அறிவின் வளர்நிலைகளை நம் முன்னோர் வகுத்தனர்.

மண் உலக வாழ்வே நிலையானது என வாழ்பவன் 'மன்னவன்'. "மன்னவனாய் நின்று மாய்ந்த நாள் போதாதோ" என்கிறார் பட்டினத்தார். மனதால் உயர்ந்து, உச்சியில் துரியத்தில் நிலைத்த சீடன் 'தென்னவன்', தென்புலத்தார் என்கிறார் வள்ளுவர். இன்னும் பக்குவப்பட்ட சீடன் அர்த்தநாரியுடன், சிவசக்தியுடன், பிரபஞ்சத்துடன் இணைந்த நிலை 'வானவன்'. இன்னும் விரிந்து, உயர்ந்து, சிவநிலையோடு கலந்து, அவனே தானாகவும் வந்த வரலாற்றை அறிந்த முழுமை 'தானவன்'. தானே அவனாக, தானே பரமாக, தற்பரனாக உணர்ந்த உச்சம் 'தானவன்'. புலன் அறியாதவற்றையும் அறியச் செய்யும் புலன் கடந்த அறிவு.

**உண்மையின் தரிசனம்**

காற்று வந்தால் மரம் அசையும்; காற்றைக் கண்டதில்லை. வீதியெங்கும் புல் முளைக்கும்; விதையைக் கண்டதில்லை. கடலின் நீரை மேகம் வாங்கும்; கண்கள் பார்த்ததில்லை - இது பக்தி.

தானே பரமாக அறிந்த தெளிவின், ஞானத்தின் வெளிப்பாடு என்ன? காற்று வந்தால் மரம் அசையும்; காற்றைக் கண்ட தில்லையே - தில்லையம்பலமே! வீதியெங்கும் புல் முளைக்கும்; விதையைக் கண்ட தில்லையே - தில்லையம்பலமே! கடலின் நீரை மேகம் வாங்கும்; கண்கள் பார்த்த தில்லையே - தில்லையம்பலமே!

அதாவது, அறிவாகிய நீயேதான் எனது புலன்வழி உணர்கிறாய். அறிவது புலனல்ல; புலன்

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வழியாக நீயே அறிகிறாய்.

**அல்லல் பிறவி அறுப்பானே: சிவபுராணத்தின் சாராம்சம்**

**"அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வா; சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து"**

இப்பாடலின் பொருள் என்னவென்றால், துன்பங்கள் நிறைந்த இந்த பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட 'ஓ' என்ற பிரணவ மந்திரத்தை உச்சரித்து, விவரிக்க முடியாத இறைவனின் திருவடியை சரணடைந்து, சிவபுராணத்தின் உட்பொருளை உணர்ந்து சொல்பவர்கள், சிவபுரத்தில் சிவனின் திருவடியில் நிலைத்து, அனைவரும் போற்றும் வண்ணம் வாழ்வார்கள்.

**அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று:**

துன்பம் நிறைந்த இந்த பிறவிச் சுழற்சியில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்ற ஏக்கத்துடன் நாம் இங்கு வந்துள்ளோம். இந்த பிறவி, நம் விருப்பப்படி வந்த ஒன்றல்ல. ஆனால், குண்டலினி தியானத்தின் மூலம் 'ஓ' என்ற சப்த மையங்களைக் கடந்து, துரியாதீத நிலையை அடைந்து, ஜீவப்பிரம்ம ஐக்கிய முக்தி நிலையை அடைய முடியும்.

**சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்:**

இப்படிப்பட்டவர், இந்த நிறத்தவர் என்று வரையறுத்து கூற முடியாத மூலப்பொருளான இறைவனை, மௌனத்தின் உருவமாகவே கருதி வணங்குவோம். சுத்தவெளியான ஆதிசிவத்திடம் சரணடைந்து, அவனது திருநாமத்தை உச்சரித்து, அவனது தெய்வ நீதியை மதித்து வாழ்வதே பிறவியின் பயன் என்பதை தட்சிணாமூர்த்தி உணர்த்துகிறார்.

**சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்:**

சிவபுராணம் என்பது பூர்வீக வரலாறு, அறிவின் பயணம், சிவனே சீவனாகிய வரலாறு ஆகியவற்றை உள்ளடக்கியது. தற்பரனாக உன்னை என்னுள் உணரப்பெற்றேன் என்ற முக்திக்கு வழிகாட்டுவது சிவபுராணம் என்பதை உணர்ந்து ஓத வேண்டும்.

**செல்வா; சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்:**

சிவபுராணத்தை உணர்ந்து ஓதுபவர்கள், சிவபுரமாகிய சுத்தவெளியோடு, ஆதிசிவத்தோடு கலந்த தெய்வீக இணைப்பில் நிலைத்து, தர்மத்தைப் பின்பற்றி வாழ்ந்து, பிறருக்கு போதித்து நிறைவு பெறுவார்கள். என்னை அவனுக்குள் இணைத்து, இறைவனாகிப் பாடுகின்றேன். உன்னுள்ளும் இவ்வுண்மையை உணர்ந்து கடைத்தேறுவதற்கு உலக மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துப் பாடுகின்றேன் என்கிறார் மகரிஷி.

**பல்லோரும் ஏத்தப் பணிந்து:**

இத்தகைய தட்சிணாமூர்த்தி என்ற குருபிரானைப் பணிந்து பின்பற்றி பயனடைவோம்.

இத்தகைய குருபரம்பரையில் வந்த பகவான் வேதாத்திரி மகரிஷி, "மலரே நீ யார் எனக் கேட்டால், மறைபொருளான தெய்வமே நான். சிலரே அறிவார் இவ்வுண்மை, சிந்தனை

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

செய்ய வல்லவர்கள். ஆதியின் அசைவே பரம அணு. அவை ஒவ்வோர் அளவில் கூட வேதம் கூறும் ஐம்பூதம் விண் முதல் மண் வரை வேறில்லை. ஒவ்வொரு பொருளும் பரம் முதலாய் அவ்வுரு வரையில் வந்த கதை செவ்விய சிறு சொல், பரிணாமம், சிறப்பை உணர்வாய் நீயும் அதே" என்கிறார்.

இதுதான் சிவபுராணம். ஆதிசிவமே அனைத்துமானதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் குழப்பம் எங்கே என்றால், சிவத்தை உருவத்தில் நம்புவதும் தேடுவதும்தான். நமது உடலின் பூர்வீகமே கண்களால் காணமுடியாத, கருவிகளால் அளக்க முடியாத, எண்களால் கணிக்க முடியாத, மருத்துவ அறிவால் அறிய முடியாத சூட்சுமம் தானே. தந்தை தாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து தழைத்த இந்த உடல், உண்டு என்று காணமுடியாத, இல்லை என்று மறுக்க முடியாத, வளர்ந்த பின் ஐயமில்லாத தோற்றம் தானே.

வெட்டவெளி சக்தி என்பதில்லையானால் வேறு எந்தப் பொருள் வலிது பிரபஞ்சத்தில் தொட்ட, தொடப்பட்ட இரு பொருட்களுடே தொட, தொட்டதாய் எண்ணும் அரூபம் யாது? பட்டப் பகலில் வானில் மீன்கள் தோன்றா. பார்வையில்லார்க்கவை எந்த நாளும் காணா எட்டவில்லை அறிவிற்கு என்பதனால், உள்ள இயற்கைத் தத்துவம் எங்கே ஒளிந்து கொள்ளும்? - மகரிஷி

எனவே ஆதிசிவம் உருவமல்ல. தூய பரம்பொருள், சுத்த வெளி, பரிசுத்த ஆவி, அல்லாஹ் போன்ற அரூபமான அப்பொருளே ஈஸ்வரனாக எழுச்சி பெற்று அனைத்துமானது. இந்த வரலாற்றில் தோன்றியது தெய்வநீதி. இதை மதித்து வாழ்வதே சொல்லிய சிவபுராண பாட்டின் பொருள் உணர்தல். தெய்வத்தை அனுபவத்தில் உணர்வதும், தெய்வநீதியை மதித்து ஒழுக்கம் காத்து வாழ்வதும் இனிமையான வாழ்வு என்பதே சிவபுராணத்தின் உட்கருத்து. உணர்ந்து பயன் கொள்வோம்.

**விக்கிரக ஆராதனையின் பரிணாமம்:** ஞானம் பெறும் வரை, காப்பகத்தில் இருக்கும் விக்கிரகத்தை மட்டுமே கடவுளாக வணங்கினேன். ஆனால், ஞானம் பெற்ற பிறகு, இதுவும் கடவுளே என்று உணர்ந்து வணங்குகிறேன். "ஏழு வயதில் விநாயகருக்கு குளிருமே என்று வெந்நீரில் குளிப்பாட்டியபோது இருந்த பக்தியையும், 35 வயதில் ஞானம் பெற்ற பின் இதுவும் கடவுளே என்று வணங்கும் பக்தியையும் நான் வேறுபடுத்திப் பார்க்கவில்லை" என்கிறார் மகரிஷி. இந்த கூற்று, விக்கிரக ஆராதனையின் ஆழமான தத்துவத்தையும், பக்தியின் நிலையான தன்மையையும் உணர்த்துகிறது.

**கண்ணதாசனின் கவிதை வரிகள்:**

உடைத்த கல்லில் ஒன்று தெய்வம், ஒன்று கோவில், ஒன்று வாசல். இறைவன் படைப்பில் எல்லாம் ஒன்றே, இடத்தைப் பொருத்தே எதுவும் மாறும்.

கண்ணதாசனின் இந்த வரிகள், இறைவனின் படைப்பில் உள்ள அனைத்திலும் ஒருமைப்பாடு இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு கல்லை உடைத்து, அதை தெய்வமாகவோ, கோவிலாகவோ அல்லது வாசலாகவோ மாற்றலாம். ஆனால், அடிப்படைப் பொருள் ஒன்றுதான். இடமும், நோக்கமும்தான் அதன் மதிப்பை மாற்றுகிறது.

**திருக்குறள் விளக்கம்:**

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற குறள், எல்லா உயிர்களும் பிறக்கும்போது சமமானவையே என்றும், அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையிலேயே சிறப்பு வேறுபடும் என்றும் கூறுகிறது. இது, சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், பிறப்பின் அடிப்படையில் அனைவரும் சமம் என்பதை வலியுறுத்துகிறது.

**மேலும் கண்ணதாசனின் தத்துவ வரிகள்:**

நீண்ட மதிற்சுவரும் நெட்டநெடுங் கோபுரமும் சூழ்ந்து மறைத்திருக்கும் சுத்தவெளி பொற்சபையே, விளக்கும் விளங்காத விளக்கமில்லா சத்தியமே, வெறும் கல்லாய் வீற்றிருக்கும் வினை கடந்த தத்துவமே.

இந்த வரிகள், கோவிலின் பிரம்மாண்டத்தையும், அங்கு வீற்றிருக்கும் இறைவனின் எளிமையையும் ஒருங்கே காட்டுகின்றன. உயர்ந்த கோபுரங்கள் சூழ்ந்திருந்தாலும், இறைவன் வெறுமனே கல்லாக வீற்றிருந்து, வினைகளை கடந்த தத்துவமாக விளங்குகிறார்.

**மகரிஷியின் வாழ்த்து:**

வையமெல்லாம் வாழட்டும், வாழ்க்கை நலம் காத்தினிதாய் வளரட்டும். மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்த்தலிலே உயரட்டும். மெய்ப்பொருள் நாட்டம் உலகெங்கும் மக்களிடம் ஓங்குக, மேலோங்குக. நம் உள்ளங்கள் ஒன்றுபடட்டும்.

இந்த வாழ்த்து, உலகம் செழிப்பாகவும், மக்கள் நலமுடனும் வாழ வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. மெய்யறிவும், இன்பமும் பெருகி, உண்மையான ஆன்மீக நாட்டம் உலகெங்கும் ஓங்க வேண்டும். மேலும், நம் உள்ளங்கள் ஒன்றுபட்டு, உலகளாவிய சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

மேற்கோள்கள்

1. திருவாசகம் - சுவாமி சித்பவானந்தா
2. திருக்குறள்
3. வேதாத்திரிய நூல்கள்
- பிரம்மஞானம்
- ஞனக்களஞ்சியம்
- ஆன்மீக விளக்கு
4. கண்ணதாசன் திரைப்பாடல்கள்

**References**

1. Thiruvasakam - Swami Chitbhavananda
2. Thirukkural
3. Vedic texts
- Brahmagnanam
- Gnanakalanjayam
- Spiritual lamp
4. Kannadasan film songs